# சுதேசமித்திரன்

'நமக்கு தொழில் நாட்டுக்கு உழைத்தல், இமைபொழுதும் சோராதிருத்தல்'

சக்கரம் 1 ஆரம் 6 அக்டோபர் 2015



## முதல் குடிமகன்

## பாரதமாதாவின் ஜாதகம்

சிறுகதை

## தலைமுறைகள் தாண்டி

புதிய தொடர்

## தமிழின் புராதனத்துவமும் நவீனத்துவமும்

## தாவரங்களின் தந்திரங்கள்

மேதகு அ. ப. செ. அப்துல் கலாம் அவர்கள் பிறந்த மாதம்

# தமிழின் புராதனத்துவமும் நவீனத்துவமும்

கெஜலட்சுமி

## தமிழின் மாண்பு

தொன்மை வாய்ந்த தமிழின் பெருமை அளப்பரியது. ஐந்தாயிரம் ஆண்டுகள் பழைமை வாய்ந்த நம் தமிழ் தனிதன்மைவாய்ந்தது. இலக்கண சாரங்கள் எத்தனை எத்தனை! இலக்கியங்கள் எத்தனை எத்தனை!! அப்பப்பா!!! தமிழை தோற்றுவித்த அப்பரம்பொருளுக்கே வெளிச்சம்! இம்மாபெரும் மொழியை வெளிச்சத்திற்கு கொணர்ந்து மக்களின் பயன்பாட்டிற்காக சீர்மிகு இலக்கணம் வகுத்த தொல்காப்பியருக்கும், அகத்தியருக்கும் கோடானு கோடி நன்றி' நவின்றாலும் மாளாது நம் 'செம்மொழியாம்' தமிழின் மாண்பு.

## தமிழின் புராதனத்துவம்

பண்டைய தமிழ் இலக்கியங்களை படித்தாலே போதும் சாமானியனும் பண்டிதன் ஆகிவிடுவான்! ஆம் ஒரு பாடத்திலா அல்லது இரண்டு பாடத்திலா அவன் ஆவது அப்படி? அனைத்து வகை பாடங்களிலும் தேர்ச்சி பெற்றுவிடாலம்! இயல் இசை நாடகம் என்கிற முத்தமிழ் மட்டும் அல்ல அவை. அறிவியல், மருத்துவம், கணிதம், அரசியல், சமயம், ஆன்மீகம், தேசியம், புவியியல், கட்டடக்கலை, போர்க் கலை, தொழில்நுட்பம், ஜோதிடம், பிரபஞ்சம் போன்ற அநேக(அனந்த கோடி என்றும் கொள்ளலாம்) பகுப்புகளிலும் அறிவை பெறலாம் !

## சங்க காலம்

கி.பி. 3 ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலத்தினைச் சங்க காலம் என்பர். இக்காலத்தில் வாழ்ந்த புலவர்களே சங்கப் புலவர்கள். இவர்களால் இயற்றப்பெற்றவை சங்கப் பாடல்கள் எனப்படும். இப்பாடல்களை தமிழ் அறிஞர்கள் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை என்று இரு பெரும் பிரிவாகப் பிரித்துள்ளனர்.

எட்டுத்தொகை நூல்களின் சிறப்புகளை கீழ்வரும் பாடல் மூலமாக அறிந்து கொள்ளலாம்.

> **நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு**
>
> **ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்**
>
> **கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு அகம்புறம் என்று**
>
> **இத்திறத்த எட்டுத் தொகை**

ஐம்பெருங் காப்பியங்கள்(சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, வளையாபதி மற்றும் குண்டலகேசி) - அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நால்வகை உறுதிப் பொருட்கள் அடங்கியவை இவை.

ஐஞ்சிறு காப்பியங்கள் (உதயண குமார காவியம், நாக குமார காவியம், யசோதர காவியம், சூளாமணி மற்றும் நீலகேசி) - இந்நூல்களைப் படிப்பதனால் பண்டைத் தமிழர்களின் சிறந்த ஒழுக்கங்களைக் காணலாம். அவர்களுடைய சமுதாய அமைப்பை அறியலாம். அவர்களுடைய அரசியல் முறை, பழக்க வழக்கங்கள் இவற்றைத் தெரிந்து கொள்ளலாம். தமிழர்களின் உயர்ந்த நாகரிகத்தையும் பண்பாட்டையும் புரிந்துகொள்ளலாம். தமிழால் தமிழனுக்கு என்றும் நிகரில்லா சிறப்பே !!

மேலும் 'பத்துப்பாட்டு', 'பதினெண் கீழ்க்கணக்கு', 'பன்னிரு திருமுறை' போன்ற எண்ணிலடங்கா கருவூலங்கள் கொண்டது நம் புராதனத்துவ தமிழ். ஒவ்வொன்றும் ஒவ்வொரு இன்பம் !

தொடரும்...

# முதல் குடிமகன்

பகுதி - 3 **மொழிபெயர்ப்பு - கார். அகிலன்**

சென்ற மாத இதழில் **குறிக்கோள்கள் மற்றும் கொள்கைகள்** என்ற தலைப்பின்கீழ் மின் உற்பத்தி பற்றியும் மின் உற்பத்தியில் தன்நிறைவு அடைவதற்கான வழிமுறைகளை பற்றியும் அய்யா அவர்களின் உரையிலிருந்து எழுதியிருந்தோம். அதன் தொடர்ச்சியாக,

## மின் இழப்பைக் குறைத்தல்:

மின் உற்பத்தி மற்றும் தடையின்றி இயங்கும் திறன்மிகு மின் நிலையங்களைத் தவிர்த்து, இழப்பில்லாத மின்சாரம் வழங்குவது மிகவும் அவசியம். 30-40% மின்சார இழப்பு மின் பரிமாற்றத்தின் போதும், விநியோகத்தின் போதுமே நடக்கிறது. 1000 பில்லியன் யூனிட் மின் உற்பத்தியில் 600 பில்லியன் யூனிட் மின்சாரம் மட்டுமே நுகர்வோரைச் சென்றடைகிறது. இதனை, பரிமாற்ற இழப்பு அல்லது கணக்கில் வராத இழப்பு என்கிறோம். நெருங்கிய கண்காணிப்பு, திறன் மேம்பாடு மற்றும் புதிய தொழில்நுட்பங்களைக் கொண்டு மின் காரணிகளை அதிகரிப்பதன் மூலம் 30-40% ஏற்படும் இழப்பை 15%-க்கு குறைக்க முயலவேண்டும். இந்த ஒரு நடவடிக்கை மூலம் உற்பத்திக்கு செலவாகும் எழுபதாயிரம் கோடி ரூபாயை சேமிக்க முடியும்.

## போக்குவரத்துத்துறை:

வேகமாக வளர்ந்துவரும் ஆற்றல் நுகர்வோர், இந்த போக்குவரத்துத்துறை. ஆண்டுக்கு 112 மில்லியன் டன் எண்ணெயை பயன்படுத்துகிறது. நாட்டின் பொருளாதாரத்திலும், பாதுகாப்பிலும் இத்துறை பெரும்பங்கு வகிக்கின்றது. போக்குவரத்து துறைக்கு தேவைப்படும் எண்ணெய் இறக்குமதிக்கு பதிலாக மாற்று

வழியைத் தேடுவதென்பது இந்தியா மிகப்பெரிய மற்றும் கடினமான சவாலாக அமையும்.

### உயிரி எரிபொருள் (Bio-Fuel):

நம்மிடம் ஏறத்தாழ 60 மில்லியன் ஹெக்டர் தரிசுநிலங்கள் இருக்கின்றன, இதில் 30 மில்லியன் ஹெக்டர் நிலங்கள் காட்டு ஆமணக்கு (Jatropha) செடிகளை பயிர்செய்ய பயன்படுத்தலாம். குறிப்பிட்ட வளர்ச்சியை அடைந்த பிறகு அச்செடியின் சராசரி வாழும் காலம் 50 ஆண்டுகள். ஒவ்வொரு ஏக்கரிலும் 2 டன் உயிரி டீசல் தயாரிக்க முடியும், இதன் விலை லிட்டருக்கு 20 ரூபாய். உயிரி டீசலானது கார்பன் நடுநிலையுடைய ஒரு எரிபொருளாகும். இதன் மூலம் பெறுமதியான பொருட்களை வேளாண்துறையிலிருந்து பெறமுடியும். உயர்ந்த திறன்கொண்டு இந்த உயிரி எரிபொருளை பொறிகளில் பயன்படுத்த தீவிர ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவேண்டும். இந்தியாவால் ஏறத்தாழ 60 மில்லியன் டன் உயிரி எரிபொருட்களை தயாரிக்க முடியும். எனவே, ஆற்றல் தற்சார்பை நோக்கிய நமது இலக்கிற்கு உயிரி எரிபொருட்களின் பங்கு கணிசமானது. இந்தியன் ரயில்வே ஏற்கனவே குறிப்பிடத்தக்க சில நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அதாவது, தஞ்சாவூரில் இருந்து நாகூர் செல்லும் பயணிகள் ரயிலில் 5% உயிரி எரிபொருளை பயன்படுத்தி வருகிறது. திருச்சி, லால்குடி, திண்டுக்கல், சேலம் ஆகிய பகுதிகளில் இயங்கும் ரயில்களில் சிலவற்றிலும் இந்த உயிரி எரிபொருள் - டீசல் கலவை நடைமுறையில் உள்ளது. மேலும், ரயில்வே துறைக்கு சொந்தமான நிலங்களில் 75 லட்சம் காட்டு ஆமணக்கு செடிகள் பயிரிடப்பட்டுள்ளன. இதே போன்று பல மாநிலங்களிலும் உயிரி எரிபொருள் தயாரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அச்செடிகளை வளர்ப்பது, அறுவடை செய்வது, பிரித்தெடுப்பது, டீசலுடன் கலப்பது, விற்பனை செய்வது என்ற அனைத்து செயல்பாடுகளும் ஒரே பொருளாதார சங்கிலியில் இணைக்கப்படவேண்டும் என்பதே தற்போதைய தேவை. வேலைவாய்ப்பு மட்டுமின்றி ஆற்றல் தற்சார்பு நோக்கிய நாட்டின் பயணத்திற்கு உயிரி எரிபொருட்களின் உதவி குறிப்பிடத்தக்கது.

எரிபொருள் இறக்குமதியைக் குறைக்க இதர வழிகளாக கருதப்படுவது மின்சார ஊர்திகள் தயாரித்தல், ஹைட்ரோஜெனைக் கொண்டு இயங்கும் ஊர்திகள் தயாரித்தல், மின்சார ரயில்கள் இயக்குதல் மற்றும் அரசு போக்குவரத்து பேருந்துகளைப் பயன்படுத்துதல்.

### தீர்மானம்:

எண்ணெய் மற்றும் எரிவாயு ஆராய்ச்சியில் உலக அளவில் நாம் மேற்கொள்ளவிருக்கும் விரிவாக்கம் மற்றும் உற்பத்தியின் மூலம் 2020- விரிவான ஆற்றல் பாதுகாபினை எட்ட வேண்டும். 2030- ல், சூரிய ஒளி மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் ஆதாரங்களின் உதவியுடன் ஆற்றல் தற்சார்பினை அடைந்திடல் வேண்டும். நீர்மின் மற்றும் அணுமின் பயன்பாட்டினை அதிகரிக்க வேண்டும். காட்டு ஆமணக்கு போன்ற

செடிகளைக்கொண்டு உயிரி எரிபொருள் தயாரிப்பதை விரிவுப்படுத்த வேண்டும். ஓராண்டிற்குள், புதுப்பிக்கத்தக்க ஆற்றல் கொள்கைகளை வகுக்கவேண்டும். காற்று, சூரிய ஒளி, புவிவெப்பமடைதல், உயிரினத்தொகுதி, கடல் போன்றவற்றிலிருந்து மின்சாரம் தயாரிக்கும்போது என்னென்ன இடர்பாடுகள் ஏற்படும் என்பதை கண்டறிய வேண்டும். தோரியம் பயன்படுத்தும் அணு உலைகளை நிறுவவேண்டும். தோரியம் சார்ந்த அணு உலைகள் அமைப்பதில் தேவையான ஆராய்ச்சியும் தொழில்நுட்ப வளர்

நம் நாட்டின் ஆற்றல் தற்சார்பு மற்றும் ஆற்றல் பாதுகாப்பிற்கான உடனடி தேவைகளாகும். ஒருங்கிணைந்த வளிமையமாக்கல் மற்றும் கூட்டு சுழற்சி வழியில் 500 மெகாவாட் திறன் கொண்ட மின் நிலையத்தை அடுத்த மூன்று ஆண்டிற்குள் நடைமுறைப்படுத்த வேண்டும்.

போக்குவரத்து ஊர்திகள் தயாரிக்கும் தொழிற்சாலைகள், கல்விக்கூடங்கள் மற்றும் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி தொழிற்கூடங்கள் ஒன்றிணைந்து உயிரி எரிபொருள் சம்மந்தமான ஆராய்சிகளில் விரிவாக்கம் செய்திடல் வேண்டும்.

உயிரி எரிபொருளை முழுநேர எரிபொருளாக பயன்படுத்த இந்த ஆராய்ச்சிகள் துணைநிற்கும்.

அமைச்சகம் மற்றும் தொழில்களால் சூழ்ந்துள்ள நாட்டின் ஒருங்கிணைந்த திட்டமாக இது செயல்படவேண்டும். மேலும், உயிரி எரிபொருள் ஆராய்ச்சி, வளர்ச்சி, உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்துதலில் ஒரு விரிவான கொள்கையை வரைதல் அவசியமானது.

ஆற்றல் தற்சார்பை நோக்கி அழைத்துச் செல்லும் ஆற்றல் பாதுகாப்பு சாத்தியமே மேலும் அதனை அடையும் தகுதியும் இந்திய நாட்டிடம் உள்ளது. அறிவு உள்ளது, வளங்கள் உள்ளன; நமது தேவை ஒருங்கிணைந்த திட்டமிடுதலும், இலக்கை நோக்கிய செயல்பாடுகளுமே. வாருங்கள், சுற்றுச்சூழலுக்கு ஏற்ப, தன்னிறைவான, ஆற்றல் தற்சார்பினை அடைய வேலைகளைத் துவங்குவோம்.

வெல்க இந்தியா !

முற்றும்

## சிறுகதை

# தலைமுறைகள் தாண்டி

**நவீன்**

அடடே! என்ன ராமசாமி ஊர்லருந்து பேரன் வந்திருக்கான் போல, என்று என் கையை கழனிக்கு அழைத்து சென்ற தாத்தாவை பார்த்து கேட்டார் சுப்பையா தத்தா, அவர் என் தாத்தாவின் நீண்ட கால நண்பர், வருடத்திற்கு ஒரு முறை லீவுக்கு என்னுடைய கிராமத்திற்கு செல்வது வழக்கம். நான் சென்ற ஒவ்வொரு முறையும் என்னை விட அதிகம் சந்தோசப்படுவது என் தாத்தாதான். நான் இருக்கின்ற அந்த 30 நாட்களும் என் தாத்தாவிற்கு கொண்டாட்டம்தான் என்னை வயலுக்கு அழைத்து சென்று தென்னை மரத்தின் கீழே உள்ள கயற்று கட்டிலில் அமரவைத்துவிட்டு அவர் தோட்ட வேலைகளை செய்து



*கொண்டிருப்பார் உச்சி வேளையில் என் பாட்டி அவருக்கு கூழும் மோர்மிளகாய் வற்றலும் கொண்டு வருவார், அப்படியே எனக்கு அரிசி சாப்பாடும் கீரை வகைகளையும் கொண்டு வந்து, நானும் என் தாத்தாவும் அமர்ந்து உணவு சாப்பிடுகின்ற அழகை அப்படியே மெய் மறந்து பார்த்துக் கொண்டிருப்பார். பாட்டியின் பெயர் அன்னம்மாள் பெயருக்கு ஏற்றவாறே அடுத்தவருக்கு கொடுத்தே பழகியவர் பசியென்று யார் வந்தாலும் போதும் என்கிற அளவிற்கு அவர்களுடைய் பசியை போக்குவார். இதற்காகவே வீட்டில் எப்போதும் உணவு இருக்கும்.*

*அப்போது நான் எட்டாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தேன் திடீரென்று ஒருநாள் என் அப்பா பள்ளிக்கு வந்து தாத்தா இறந்துவிட்டார் என்று என்னை அழைத்து சென்றார். நாங்கள் ஊருக்கு சென்றது முதலில் பார்த்தது என் தாத்தாவின் கட்டப்பட்ட கால்களைத்தான் என்னுடன் வயலில் துள்ளி விளையாடிய அந்த கால்கள் இப்போது கட்டி வைக்கப்பட்டதால் அமைதியாக இருக்கின்றன. கயிற்றுக் கட்டிலில் என்னை அமர வைத்து வயலில் வேலை செய்தாலும் என்னையே கவனித்துக் கொண்டு நான் செய்த குறும்புத்தனத்தை ரசித்த அவரது கண்கள் அமைதியை தேடி சென்றுவிட்டது.*

*இப்போது நான் ஒரு பெரிய கம்பெனியில் மாதம்* 20,000/- *சம்பாதிக்கும் மேனேசர். நான் சிறுவனாக இருந்தபோது என்னை என் அப்பா மிகவும் கண்டிப்புடன் நடத்துவார், இப்போது அவரும் அம்மாவும் ஊருக்கே சென்று விட்டனர். நானும் என் மனைவி குழந்தைகளும் சென்னையில் இருக்கிறோம். இப்போது என் குழந்தைகளிள் ஊருக்கு செல்லும் போது நான் சில கண்டிப்புகளை சொல்லி அனுப்புவேன். கடைசியாக ஒரு ஊர் திருவிழாவிற்காக குடுப்பத்துடன் சென்றோம் அப்போது என் மகனை பார்த்து சந்தோஷத்தில் அவனை வாரியணைத்து பெருமையாக ஒரு நடையை நடந்தார், பார்ப்பவர்கள் என்ன சுப்பிரமணி உன் பேரனா? என்று கேட்கும்போது அவருக்கு ஒரு கர்வம் ரொம்பவே மகிழ்ச்சியாக சொன்னார், என் பேரன் தான் திருவிழாவிற்கு வந்திருக்கிறான் என்று.*

*என் மகனை பார்க்கும்போது எனக்குள் தோன்றியது என் தாத்தாவும் என்னை இப்படி அழைத்து செல்லும்போது என் தந்தை எவ்வளவு சந்தோஷப்பட்டிருப்பர் என்று. உறவுகள் என்பது வெறும் வார்த்தைகள் மட்டுமல்ல அது தலைமுறைகளைத் தாண்டி நிற்கும் பாசத்தூண்கள்.*

# பாரதமாதாவின் ஜாதகம்

வேம்பத்தூர் கிருஷ்ணன்

விடுதலை போராட்ட ஈகி திரு. வேம்பத்தூர் கிருஷ்ணன் எழுதிய பாரதமாதாவின் ஜாதகம் என்ற நூலிலிருந்து. [சென்ற மாத தொகுப்பின் தொடர்ச்சி]

திலகவதியாரும் காரைக்கா லம்மையும்
தீச்சுடர்க் கண்ணகி மணிமே கலையும்
உலகப்புகழ் பெற்ற மங்கையர்க் கரசி
"ஓம்நம சிவாய" மண்டோதரியும்,
பலவகை மகளிர் , ரிஷிபத் தினியர்
பாற்கடற் கண்ணனைப் பாடிய ஆண்டாள்
'நிலவுலகத்தில் ஜாதிவித்யாசம்
நீபடைத்ததா?' கேட்ட, அத்துழாய்!
இப்படிப் பற்பல இதிகாச மகளிர்
ஏராளப் புலவர், இல்லற மாதர்
செப்பம் செய்தது தமிழ்ப்பண் பாடு
ஸ்ரீசிவ சக்தியற் கட்டிய வீடு
உப்பரிகை, தேர், மாடமாளிகை
ஓங்கி வந்தோடும் ராஜகோபுரம்!
எப்படியெல்லாம் சாதனைசெய்தோம்
ஏனின்று 'செல்போன்' அடிமைகளானோம்?
பாரத கண்டத்தில் புண்ணியப் பலனாய்
பாய்கிற நதிகளின் தாய்மலை இமயம்
பால்பழம் தேன்நவ தானிய நெல்மணி
பலகோடி தங்க வைரப் பாலம்!
ரிஷிகளும் சித்தரும் வாழ்ந்த நாட்டிலே
"நீயா, நானா?" அரசர் கோயில்கள்
போர்வெறி யாளரின் புகலிடமானது
பதினெட்டு முறை கஜினிக் கொள்ளைகள்-வட
பாரத மெங்கிலும் பெருந்துயர் அலைகள்!
பாய்மரக் கப்பலில் வியாபாரி கலாய்
பஞ்சம் பிழைக்க வந்த வெள்ளையர்
பகற் கொள்ளையராய் மாறிநம் நாட்டை
பங்குபோட்டனர்! அடிமைக லானோம்!!
அடிமைகளான நம்முள் சிலபேர்
அவர்களதுகைக் கூலிகளானார்

"பக்தி இல்லாத நாடு விரைவிலே
பாலைவனமாகும் மறந்துவிடாதீர்!
பாடுபடாத மக்களின் வாழ்க்கை,
படுபாதாளம் அடைந்து உடையும்!
சக்திதருவது தேச பக்தியே
சாதனை விளைவது தெய்வபக்தியால்
எத்திசை ஓடியும் பாடுபடவேண்டும்
யாரிடமும் கைஏந்தி நிற் காதிர்!"
ஔவைத் தாயின் நீதித் தமிழ்நூல்,
அனைத்தும் பண்பும் பாடுபடுகின்ற
ஆர்வம் பெருகும் மக்களிடம்,
இவ்வை யத்துள் மீண்டும் தமிழகம்
"ஏஒன்' தொழில்வளத் தலமாகும்,
ஏழ்மையும் வறுமையும் ஓடிவிடும்
எல்லோர்க்கும் நல்லருள் தேடிவரும்.
ஆணுக் குப்பெண் அடிமை என்பது
அறிவிலிகள் போட்ட சூழ்ச்சிவலை!
அந்தநாளிலே வேத விளக்க நூல்
தந்ததும்பாரத மாதாககளே
காணும் அனைத்தும் சிவசக்க்தி
கண்ணனின் கவசமே" "ஸ்ரீ" தானே!
கவனத்தோடு" பாரத மாதா
ஜாதகம் படிக்க வாருங்கள் ...
மூவேந்தர் சேர , சோழ , பாண்டியர்.
முத்தமிழ் இதிகாச மதுரை மூதூர்.
சேதுமுதல் இமயமே பரதகண்டம்
சிறியபெரிய நாடுகள் ஐம்பத்தாறு
'நீயா நானா' அரசை சீறிச் சிதறினர்!
நிலைகண்டுபர தேசிகள்வன்தனர்
மாற்றினர் நமது தொன்மையனை த்தையும்
மறுபேச்சு இல்லாமல் அடிமைகலானோம்.

தொடரும்...

# தாவரங்களின் தந்திரங்கள்

**எம்.மரிய பெல்சின்**

*நொச்சி, கொசுவை மட்டுமல்ல...*
*நோய்களையும் விரட்டும்!*




*நொச்சி. இது ஒரு குத்துச்செடி. குறுமரம் என்றுகூட சொல்லலாம். சமவெளியில் 4 மீட்டர் உயரமும், மலைப்பகுதிகளில் 6 மீட்டர் உயரமும் வளரக்கூடியது. நொச்சி இலையை பச்சையாகவோ அல்லது உலர்த்தியோ தலையணை உறைக்குள் வைத்து அதன்மீது தலை வைத்து உறங்கினால் தலைவலி, ஜலதோஷம், பீனிசம் என்று சொல்லப்படும் சைனஸ் சரியாகும். மூக்கடைப்பு, தும்மல், ஜலதோஷம், சளித்தொல்லை என தொடர் பிரச்சினைகளால் அவதிப்படுவோர் நொச்சி இலைகளை தண்ணீர் விட்டு கொதிக்க வைத்து (ஆவி பிடித்தல் அல்லது வேர்வை பிடித்தல்) அதிலிருந்து வெளிவரும் சூடான ஆவியை மூக்கால் உள்ளிழுத்தால் (நுகர்வதால்) நிவாரணம் கிடைக்கும். நொச்சி, மிளகு, பூண்டு, இலவங்கம் (கிராம்பு) போன்றவற்றை மென்று தின்றால் இரைப்பு நோய் குணமாகும். மேலும் நொச்சி இலையை சுக்கு சேர்த்து அரைத்து நெற்றி, கன்னம் போன்ற பகுதிகளில் பற்று போட்டால் தலைவலி சரியாகும். வலி, வீக்கம், கீல்வாயு வந்தால் நொச்சி இலையை வெறுமனே வதக்கி ஒத்தடம் கொடுத்தால் நிவாரணம் கிடைக்கும். வீக்கம் எனும்போது அடிபட்ட வீக்கம்... உடம்பில் தலை முதல் கால் வரை எந்த பகுதியில் அடிபட்டாலும் இந்த ஒத்தடம் பலன் தரும். இந்த ஒத்தட சோதனை எலிகளுக்கு பரீட்சித்து பார்க்கப்பட்டு உறுதிபடுத்தப்பட்டுள்ளது. எலி மட்டுமல்ல... நானே பலமுறை செய்திருக்கிறேன், நல்ல பலன் கிடைத்திருக்கிறது. நொச்சி இலைச்சாறு அல்லது இலையுடன் நல்லெண்ணெய் சேர்த்து நன்றாக காய்ச்சி பொறுக்கும் சூட்டில் சிறிதளவு தலைக்கு தேய்த்து குளித்து வந்தால் சைனஸ், கழுத்தில் நெறிகட்டுதல், கழுத்துவலி போன்றவை சரியாகும். நொச்சி, பொடுதலை, நுணா இலை போன்றவற்றால் ஆன கஷாயம் குழந்தைகளுக்கு வரும் மாந்தத்தை கட்டுப்படுத்தும்.*

கொசுவை விரட்ட என்னென்னவோ மருந்துகள் சந்தைகளில் விற்பனைக்கு வருகின்றன. இவற்றில் பல மருந்துகள் கொசுக்களை விரட்டுகிறதோ இல்லையோ நம்மை இந்த உலகத்தை விட்டு விரட்ட ஆயத்தமாகி வருகின்றன. ஆம்... கொசுவிரட்டிகளில் கலக்கப்படும் ரசாயனங்கள் ஆபத்தானவை என்பதை நாம் உணராமலேயே அவற்றை படுக்கை அறைகளில் வைத்திருக்கிறோம். அப்படியானால் கொசுவை விரட்ட என்னதான் வழி என்கிறீர்களா? படுக்கை அறையில் நம்மைச்சுற்றி வெறுமனே நொச்சி இலைகளை வைத்தால் கொசு நெருங்காது. நொச்சி, வேப்பிலை போன்றவற்றை புகை மூட்டம் போடுவதாலும் கொசுத்தொல்லைகளில் இருந்து காத்துக்கொள்ளலாம். சிலர் நொச்சி செடியை தைலச்செடி என்று சொல்கிறார்கள். பார்ப்பதற்கு யூகலிப்டஸ் இலை போன்று இருப்பதால் அப்படி சொல்கிறார்கள். மலைச்சரிவுகளில் மண் அரிப்பை தடுக்க நொச்சி செடிகளை நெருக்கமாக பயிரிடலாம். ஆறுகள், நீரோடைகள் போன்றவற்றின் கரைகளிலும் இவற்றை நட்டு வைக்கலாம்.

இதனால் கரைகளுக்கு வலு சேர்ப்பதோடு வெள்ளம் ஏற்படும்போது கரைகள் உடையாமல் காத்துக்கொள்ளும். நீர் செழிப்புள்ள இடங்களில் நொச்சி காற்றை தடுக்கும். வீடுகளின் முகப்பிலும் நடுவதால் தூசியை வடிகட்டுவதோடு கொசுக்களை விரட்டும் தன்மை உடையது.
இவை எல்லாவற்றையும்விட, புற்றுநோயைக்கூட குணப்படுத்தும் தன்மை நொச்சி இலைக்கு இருப்பதாக ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன.

## கவிதை

# பாரதி

தமிழரசு

ஏய் மகாகவி
எங்கே செல்கிறாய் நில்!
பெயர் அழைத்து கூப்பிட்டதால்
பேய் அரைந்தது போல் நிற்கிறாய்!
நீ காலனை காலால் உதைத்தத்ற்கு
இது எவ்வளவோ பரவாயில்லை!
நின்று விட்டாய், இப்போது என்னை கவனி.
எல்லையில் நித்தமும் சத்தம்
ராணுவ வீரனின் மரணம்
ஆனால் இங்கே,
அந்த அரை பக்க செய்தியை படித்து விட்டு,
அடுத்த பக்க சினிமா செய்தியை படிக்கின்றார்.
இந்த அவலம் கொண்டு ஒரு கவிதை சொல்!



பாரத எல்லையை காட்டிலும்
மாநில எல்லையே ஒரு பெரும் தொல்லை
தண்ணீருக்கு தடங்கல்கள்
உணவை அனுப்புவதில் உறுத்தல்கள்
மரம் வெட்டியதால் மரணங்கள்
இந்த சங்கடத்தை குறித்து ஒரு கவிதை சொல்!
மாவட்ட எல்லைக்கும் குறைச்சல் இல்லை
சாதியப் பிரச்சனை எனும் சாத்தான்கள்
துர்நாற்ற தொழிற்சாலைகளின் தோரணைகள்
**TASMAC** எனப்படும் தற்கொலைக் கடைகள்
இந்த சபலத்தை சாய்க்க ஒரு கவிதை சொல்!
வீட்டை தாண்டினாலே விண்வெளி இன்று
எதிர் வீட்டு பெரியவரை தெரியாது,
தெருவில் விளையாடும் குழந்தைகளை தெரியாது,
உண்மையான சமூகத்தை **delete** செய்துவிட்டு,
**Facebook** சமூகத்தை **log in** செய்கிறார்கள்.
இந்த அறியாமையை அகற்ற ஒரு கவிதை சொல்!
இவ்வளவு சொல்லியும் பதிலே இல்லை
ஆதங்கத்துடன் அருகே செல்கையில்,
அமைதியாக அவன் சொன்னான்,
“மாறு வேடப் போட்டியில் பரிசு பெறாத துயரத்தில்
நான் செல்கிறேன். நீ மேலும் கஷ்ட்ப்படுத்ததே” என்றான்.
மேலும் ஒன்று சொன்னான்,
“இவ்வேடத்தின் பெயர் பாரதி என்று அம்மா சொல்லிக்கொடுத்தார் .
நீ ஏதோ மகாகவி என்கிறாய் , அது நான் இல்லை”
என்றாரே பார்க்கலாம்!

## விருது

 

இராமலிங்கர் பணிமன்றம் தங்களது பொன்விழா ஆண்டை கடந்த 01.10.2015 அன்று கொண்டாடினர். விழாவை தலைமேற்று திரு. பி. எஸ். ராகவன். (ஓய்வு இ.ஆ.ப.) "அருள்ஜோதி மகாத்மா காந்தி விருது" வழங்க விடுதலைப் போராட்ட ஈகி திரு. வேம்பத்தூர் கிருஷ்ணன் அவர்கள் பெற்றுக்கொண்டார் (முதல் படம்). திரு. வேம்பத்தூர் கிருஷ்ணன் அவர்கள் ஏற்புரை வழங்குகிறார் (இரண்டாவது படம்).

## தன்னார்வலரின் குரல்



இவர்தான் திரு. சுதர்சன். ஒரு தனியார் நிறுவனத்தில் பணிபுரியும் இவர் வார இறுதி நாட்களில் சமூகப் பணிகளைச் செய்து வருகிறார். இப்பணி செய்ய துவங்கிய காலத்தில் இவருக்கு இதில் பெரிய ஆர்வம் இருந்திருக்கவில்லை. ஒரு முறை பேருந்து நிலையத்தை தூய்மையாக்கும் பணியில் ஈடுபட்டிருந்த வேளையில், பொதுமக்களின் ஆதரவும், அவ்விடத்தில் ஏற்பட்ட மாறுதல்களுமே இவரை இப்பணியில் தொடர்ந்து ஈடுபட ஊக்கமளித்தது. இப்பொழுது பொதுமக்களும் அந்த இடத்தை தூய்மையாக வைத்திருக்க உதவுகின்றனர். 'துவக்கம்' என்ற அமைப்புடன் சேர்ந்து பொது இடங்களில் மரக்கன்றுகளை நட்டு பராமரித்து வருகிறார். மரம் வளர்க்க மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கு முன் தாம் அதை செய்யவேண்டும் என்பதில் கூடுதல் சிரத்தையுடன் இருக்கிறார்.

"சமுதாயத்தில் அனைத்து வகையிலும் மாற்றம் ஏற்பட வேண்டும் என்பது என் குறிக்கோள். அதற்காக என்னால் முடிந்த வரை பணிகளை செய்துகொண்டே இருப்பேன். சமூகப் பணி மனநிறைவைத் தருகிறது." என்கிறார் சுதர்சன்.

தோழரின் பணிகள் சிறக்க சுதேசமித்திரன் வாழ்த்துகிறது.

## சமூக அக்கறை கொண்ட அமைப்புகளின் கடந்த மாத பணிகள்

### அறப்போர்

அறப்போர் இயக்கத்தின் இளைஞர்கள் சந்திப்பு நிகழ்ச்சி முதல் கட்டமாக சென்னை கல்லூரிகளில் நல்ல முறையில் நடைபெற்று வருகிறது. அனைத்து கலைக்கல்லூரி ஆசிரியர்களும் இந்த நிகழ்சிகளுக்கு ஆதரவு கொடுப்பது மிகவும் மகிழ்ச்சி.




### நிழல்

நிழல் மற்றும் தி இந்து (சென்னை நண்பர்கள்) இணைந்து மயிலாப்பூர் குளத்தை சுற்றி புன்னை மரக்கன்றுகள் நட்டனர்.



**தங்களின் மேலான பார்வைக்கு:**

உங்கள் ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கும் சமூக நற்சிந்தனைகளை வெளிக்கொணரவும். பார்த்த, படித்த, அறிந்த அல்லது செய்த சமூக செயல்பாடுகளை தெரியப்படுத்துங்கள். நாட்டின் வளர்ச்சி நோக்கிய சமூக அக்கறையுள்ள கதைகள், கட்டுரைகள், கவிதைகள் வரவேற்கப்படுகின்றன.

தங்களது மேலான ஆலோசனைகளுக்கும் பங்களிப்பிற்கும் தொடர்புகொள்ளுங்கள்.
மின்னஞ்சல் : emagz@thozhan.org
பேசி: 8122195591